# பட்டினப்பாலை - மீள்வாசிப்பு

**கலாநிதி செல்வி செ.சிவசுப்பிரமணியம்,**
முதுநிலை விரிவுரையாளர்
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
mssivasubramaniam@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

பட்டினம் + பாலை என்பதே பட்டினப்பாலை எனப்பட்டது. பட்டினம் என்பது காவிரிப்பூம் பட்டினம் என்பதைக் குறிக்கும். முற்காலச் சோழநாட்டின் தலைநகரமாக இது விளங்கியது. இது கடற்கரை நகரம் எனவும் அழைக்கப்படுகின்றது. பாலை என்பது பிரிதலும் பிரிதல் நிமித்தத்தையும் உரிப்பொருளாகக் கொண்ட ஒழுக்கத்தை அடையாளப்படுத்துகிறது. துறையாக செலவு அழுங்குதல் (தலைவியைப் பிரிந்து செல்லுதலைக் கைவிடுதல்) அமைகின்றது.

**ஆய்வு நோக்கம்:-**

பட்டினப்பாலை அகத்திணை பேசும் நூலாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஆனால் அது புறத்திணை இயலையும் பேசுகின்றது என்பதனை ஆய்விற்கு உட்படுத்துதல்

இதில் சுட்டப்படும் மன்னர் பெயர் (கரிகாலன்- திருமாவளவன்) ஒன்றா வேறா என்ற சர்ச்சையை ஆய்விற்கு உட்படுத்தல்.

**ஆய்வின் கருதுகோள்:-** அகப்புற இலக்கியமே பட்டினப்பாலை எனப் பகுப்பாய்வு செய்து காட்டப்படும். கரிகாலனே திருமாவளவன் என நிறுவப்படுகிறது.

**ஆய்வு முறையியல்:-** விபரண ஆய்வு, பகுப்பாய்வு முறை, விமர்சன ஆய்வு முறை என்ற முறையியல்களை அடிப்படைகளாகக் கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

**திறவுச்சொற்கள்:** பட்டினம், பாலை, காவிரி,கரிகாலன், பிரிதல், போர்.

**அறிமுகம்**

சங்க இலக்கியத்தின் செல்வாக்கு காப்பியம், சிற்றிலக்கியம், பக்தி இலக்கியம் முதற்கொண்டு இக்கால உரைநடை இலக்கியங்கள் வரை பரவி இருக்கின்றது. தமிழகத்தின் பழமையான வரலாற்றை அறிவதற்குச் சங்க இலக்கியங்கள் பேருதவி புரிகின்றன. சங்க இலக்கியங்களை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனப் பகுப்புச் செய்வர். பத்துப்

பாட்டு அமைப்பினுள் ஒன்றாகப் பட்டினப்பாலை இடம் பெறுகின்றது. பத்துப்பாட்டினுள் முல்லைப் பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை ஆகிய மூன்றும் அகத்திணை மரபுக்குரியனவாகவும் ஏனைய ஏழும் புறத்திணைக்குரியனவாகவும் பகுக்கப்பட்டுள்ளன. தொல்காப்பிய இலக் கணத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் பொழுது பட்டினப்பாலையை அக ஒழுக்கத் தையும் புற ஒழுக்கத்தையும் சேர்த்துச் சொல்லும் நூலாகக் கொள்வதே பொருத்தமாகும். பட்டினப் பாலை 301 அடிகளை உடையது.

பட்டினம் + பாலை பட்டினப்பாலை ஆனது. பட்டினம் என்பது கடற்கரையில் உள்ள ஊர் களைக் குறிக்கும். இங்கு வருகின்ற பட்டினம் என்பது காவிரிப்பூம் பட்டினத்தைக் குறிக்கிறது. காவிரிப்பூம் பட்டினம் என்றவுடன் சிலப்பதிகாரம் ஞாபகத்திற்கு வரும். சிலப்பதிகாரமும் காவிரிப்பூம் பட்டினத்தையே சிறப்பித்து நோக்குகின்றது. பாலை என்பது பாலைத்திணையைக் குறிப்பது. எனவே, பட்டினத்தையும் பாலைத்திணையையும் கூறுவதால் பட்டினப்பாலை எனப் பெயர்பெற்றது. காவிரிப் பூம் பட்டினம் சோழநாட்டின் தலைநகரம். கடற்றுறைமுகம் கொண்ட சோழர் தலைநகரங்களாகக் காவிரிப்பூம் பட்டினமும் உறையூரும் விளங்கின. பட்டினப் பாலையின் பாட்டுத்தலைவன் திருமாவளவன் எனச் சிலரும் கரிகாலன் எனச் சிலரும் கூறுவர். திருமாவளவன் என்பதும் கரிகாலன் என்பதும் ஒருவரையே குறிக்குமா அல்லது இவர்கள் வேறு வேறானவர்களா என்பது ஆய்வுக்குரியது. வரலாற்று ஆய்வு, கல்வெட்டு ஆய்வுகள் மூலமே சரியான ஆய்வினை முன்னெடுக்க முடியும்.

மறைமலையடிகள் பட்டினப்பாலை ஆராய்ச்சியுரையில் பட்டினப்பாலையின் பாட்டுடைத் தலைவன் திருமாவளவன் என்றே குறிப்பிட்டுள்ளார். (மறைமலையடிகள், 1906, நூ.300) சங்க இலக்கியம் பத்துப்பாட்டு என்ற நூலில் ச.வே சுப்பிரமணியன், திருமாவளவன் பற்றிய செய்தி யைச் சொல்லுகிறார். இந்நூலில் வருகின்ற ஒரு வெண்பாவில் கரிகாலன் பற்றிய செய்தி சேர்க்கப் பட்டுள்ளது. (ச.வே.சுப்பிரமணியன், 2003, ப.500) இதனால் தான் பின்வந்த ஆய்வாளர்களும் கரிகாலன் பற்றிக் குறிப்பிடுகின்றனர். பொருநராற்றுப்படையில் வருகின்ற,

"அரிமா சுமந்த அமளி மேலானைத்
திருமாவளவன் எனத்தேறேன் திருமார்பின்
மானமால் என்றே தொழுதேன் தொழுதகைப்
போனவா பெய்த வளை" (பொருநர். வெண்பா பா.02)

என்ற வெண்பாவில் திருமாவளவனை அரசன் என்று நினையாது திருமால் என்றே நினைத்ததாகக் கூறப்படுகின்றது. மேலும்,

"முச்சக்கரமும் அளப்பதற்கு நீட்டிய கால்
இச்சக்கரமே அளந்ததால் செயச்செய்
அரிகால்மேல் தேன் தொடுக்கும் ஆய்புனல் நீர் நாடன்
கரிகாலன் கால் நெருப்பு உற்று" (பொருநர்.வெண்பா.பா.03)

என்ற வெண்பா மூன்று உலகங்களையும் அளப்பதற்கு நீட்டிய கரிகாலனது கால்கள் இந்த நில உலகத்தை மட்டுமே அளந்தது. சோழன் கரிகாலனது கால் சிறுவயதில் நெருப்பினால் தீண் டப்பட்டது எனக் குறிப்பிடப்பட்டுகின்றது. இதே பாட்டு பட்டினப்பாலையின் இறுதியில் வெண்பா வாகச் சேர்க்கப் பட்டுள்ளது.

திருமாவளவன் பொருநராற்றுப்படையில் கரிகாலன் என்ற பெயரால் பேசப்படுகின்றான். இவன் பட்டினப்பாலையில் திருமாவளவன் எனப் பேசப்படுகின்றான் என்றே கொள்ளலாம். பொரு

நராற்றுப்படையைப் பாடியவர் முடத்தாமக்கண்ணியார். இந்நூலில் கரிகாலனைப் பாடியவரும் இவர்தான். பட்டினப்பாலையைப் பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். திருமாவள வனைப் பாடியவரும் இவர்தான். இராகவையங்கார் தனது ஆய்வில் திருமாவளவன் வேறு கரி காலன் வேறு என்று குறிப்பிடுகின்றார். நச்சினார்க்கினியர் முதலான உரைகாரர் திருமா வள வனும் கரிகாலனும் ஒருவரே என்று கூறினர். இது ஆய்வுக்குரிய ஒன்றாகும்.

கரிகாலனின் தந்தை பெயர் இளஞ்சென்னி எனப் பொருநராற்றுப்படை கூறும். இதனை,
"உருவப் பல்தேர் இளையோன் சிறுவன்" (பொருநராற்றுப்படை 130)
"கண்ஆர் கண்ணிக் கரிகால்வளவன்"(பொருநராற்றுப்படை 148)

என்ற அடிகளால் அறியலாம். சோழன் நலங்கிள்ளியின் தம்பிமார் இருவர். மூத்த தம்பி மாவ ளத்தான், இளையதம்பி இளஞ்சென்னி. அந்த இளஞ்சென்னியின் மகன்தான் கரிகால் பெருவளத் தான். இளஞ்சேட் சென்னியை இளம்பெருஞ்சென்னி எனவும் கூறுவர். இதே போன்று கரிகால னைப் பெருவளக் கரிகால் எனவும் கூறுவர். பெருவளம் என்பது பெருவள நல்லூர் என்பதாகும். இராகவையங்கார் பின்வருமாறு கூறுவது இங்கு நோக்கத்தக்கது. "திருமாவளவன் தந்தை பெயர் கூறப்படாதவன். கரிகாலன் இளம்வயதிலே(கருவிலே தந்தை இறந்தபோது) அர சுரிமை பெறுகி றான்" என்பதும் இவன் சிறைப்பட்டிருந்து பின்பு அச்சிறையிலிருந்து வெளியேறித் தனது வாள் வலிமையால் அரசு எய்தினான் என்பதும் பட்டினப்பாலையின் பின்வரும் பாடல் வரிகளால் தெரிய வருகின்றது.

"பிணியகத் திருந்துபீடு காழ் முற்றி
...தின் காப்பேறி வாள் கழிந்து.
ஊழினாகிய தாயமெய்தி"

கரிகாலன் சேரர், பாண்டியரை வெண்ணிப்போரில் வென்றவன். திருமாவளவன் தென் னவர், குடவர் பொதுவர், அருளாளர், ஒளியர் என்போரை அடக்கியதாக அறியப்படுகின்றது. இவ் வாறு பல மேற்கோள்களினூடாகத் திருமாவளவனும் கரிகாலனும் வேறு வேறானவர்கள் என்ற முடிவிற்கு வரலாம்" என இராகவையங்கார் குறிப்பிடுகின்றார். (இராகவைங்கார்,1951, ப.15)

கரிகாலன்தான் திருமாவளவன் என்பதற்கு ஆதாரங்களாகக் கல்வெட்டுகளும் இலக்கியங் களும் அமைகின்றன. சீனிவாச ஐயங்கார் "பழந்தமிழ் பாடல்களில் பெயரிட்டுக் குறிப்பிடப்படும் முதல் தமிழ்ப்பெருவேந்தன் இவன்" என்கிறார்

கரிகாலன் பற்றிப் பழந்தமிழ் இலக்கியங்கள் நிறையப் பேசுவதைக் காணலாம்.
" உருவப் பல்தேர் இணையோன்" (அகம் 55 10-12) மகன் கரிகாலன் தாய் வயிற்றில் இருக்கும் பொழுதே அரசுரிமை எய்தினான். வெண்ணிப் புறந் தலைப்போரில் இவன் இரு பெரு வேந்தரை வென்றான். தோற்றவர்களுள் ஒருவரான சேரலாதன் புறப்புண்ணுக்கு நாணி வடக்கி ருந்து தன்னுயிரை மாய்த்துக்கொண்டான். (புறம் 66, பொரு143 - 8, புறம் 65)

பொருநராற்றுப்படை கடைசி வரி கரிகாலனைக் காவிரி புரக்கும் நாடு கிழவோன் என்று அழைக்கின்றது. கரிகாலனிடம் சேர, பாண்டியர்கள் மட்டுமல்லாமல் பதினொரு வேளிரும் தோற்றனர் என்ற செய்தியை அகநானூறு குறிப்பிடுகிறது. (அகம் 246)

கரிகாலன் காவிரிக்குக் கரை அமைத்ததை இராசேந்திர சோழன் முதலாம் திருவாலங் காட்டுச் செப்பேடும் தெலுங்கு சோழ அரசர்கள் கல்வெட்டுகளும் குறிப்பிடுகின்றன. மறை மலை யடிகள், சவே.சுப்பிரமணியம், நச்சினார்க்கினியர் முதலானோர் திருமாவளவனும், கரி காலனும் ஒருவரே என்று கூறுவது பொருத்தமாக அமைகிறது. இராகவையங்கார், திருமாவளவனும் கரி

காலனும் வேறு வேறானவர்கள் எனக் கூறுவது பொருத்தமற்றது.

**பட்டினம்**

இங்கு பட்டினம் எனச் சிறப்பிக்கப்படுவது காவிரிப்பூம்பட்டினம் என்பதாகும். சோழ நாட்டின் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பும் அதன் செல்வ வளமும் இயற்கை வளமும் புலவ ரால் எடுத்து விளக்கப்படுகின்றது. மழை பெய்யாது பொய்த்தாலும் குடகு மலையில் தோன்றிக் கடலில் கலக்கும் காவிரியாறு பொய்ப்பதில்லை எனக் காவிரியாற்றின் சிறப்புப் பேசப்படுகின்றது. சோழநாட்டின் முதன்மையான தலைநகரம் பூம்புகார். பூம்புகார் சிறந்த துறைமுகத்தை உடை யது. புகார் என்பது ஆறு. ஆறுகள் கலப்பதால் பூம்புகார் எனப்பட்டது. பின்னர் காவிரிப்பூம் பட்டினம் எனப் பெயர் பெற்றது. காவிரிப்பூம்பட்டினம் பல பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளது. காவிரி, காகந்தி, சம்பாபதி, பல்புகழ்மூதூர், சோழப்பட்டினம், நடந்தாய்வாழி, காவேரி எனப் பல பெயர் களால் இலக்கியங்களில் பூம்புகார் பட்டினத்திற்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

சோழ நாட்டின் வயல்களில் விளைச்சல் குன்றாதிருந்தன. நெற்கதிர்களை உண்ட எருமை கள் நெற்கூடுகளின் நிழலில் உறங்கும் காட்சி எடுத்துக்காட்டப்படுகின்றது. சோழநாடு கடற்கரை ஊர்களையும் சிற்றூர்களையும் உடையது. முற்றங்களில் நெல் உலரவிட்ட காட்சி உவமை மூலம் விளக்கப்படுகின்றது. கடற்கரையில் வாழ்வோர் உப்பை விற்பனை செய்து அதற்கு விலை யாகப் பெற்ற நெல்லைப் படகுகளில் ஏற்றிக் காவிரிப்பூம் பட்டினம் செல்வர். நெய்தல் நிலத்தை அடுத்துத் தோட்டங்களும் பூஞ்சோலைகளும் காட்சியளித்தன.

**பாலைத்திணை**


திணை என்ற சொல் பல பொருளில் கையாளப்பட்டுள்ளது. திவாகர நிகண்டில் நிலம், குலம் ஒழுக்கம் என்று விளக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியம் சொற்களை உயர்திணை, அஃறிணை எனப் பிரித்துப் பேசுகின்ற பொழுது இனம் என்ற பொருளில் கையாள்வதை நோக்கலாம். பொரு ளதிகாரத்தில் ஏழுதிணை என்று மட்டுமே கூறுகின்றார். அங்கும் திணை என்றால் என்ன வென்று கூறவில்லை. தொல்காப்பிய அகத்திணையியலில் திணை என்பது ஒழுக்கத்தையும் நிலத்தையும் சுட்டி நிற்கின்ற சொல்லாகின்றது. இதனை இளம்பூரணர் தனது உரையில் நிலத் துக்கு ஆகிவந்த ஆகுபெயர் எனக் கூறுவார். பேராசிரியர் கா.சிவதம்பி அவர்கள் "திணை என்பது அமைப்பு அடிப்படையில் நிலம், நிலத்துள் வாழும் மக்கள் குழுமம், அவர்களது ஒழுக்கம் என்ற கருத்தினையே தரும். திணை என்பது பொதுப்படையாக ஒழுகலாற்றைக் குறிக்கின்ற ஒரு சொல் லாக இருக்கின்றது." என்று கூறியமை குறிப்பிடத்தக்கது. (சிவதம்பி.கா.2009ப.41)

"கைக்கிளை முதலாகப் பெருந்திணை இறுவாய்
முற்படக்கிளந்த எழுதிணை என்ப" (தொல்.அகம்.32)

இங்கு திணை என்பது ஒழுக்கம் எனச் சுட்டப்படுகின்றது. அடுத்த நூற்பாவில்,

நடுவண் ஐந்திணை நடுவணது ஒழிய படுதிரை வையம் பாத்தியப் பண்பே" (தொல்.அகம்.சூ.2)

இந்த இடத்தில் திணை என்பது நிலம் எனப்பட்டதை நோக்கலாம்.



தொல்காப்பியர் மேற்குறிப்பிட்ட சூத்திரத்தில் நடுவண் ஐந்திணை மரபில் நடுவணது ஒழிய என்பது பாலை ஒழிய என்கிறார். பாலை நிலம் ஒழிய மற்றைய நான்கு நிலம் பற்றிப் பேசுகின்றார். ஆகவே பாலை என ஒரு நிலம் இல்லையா என்ற வினா எழுகின்றது. ஆனால் அகத்திணையியலில் பிரிவு சொல்லுகின்றார். பிரிவு சொல்வதால் பாலை நிலம் இருக்கிறது என்றே கொள்ளலாம். தொல்காப்பியம் பாலைக்குத் தெய்வம் குறிப்பிடவில்லை. ஏனென்றால் பாலை நிலம் வரண்ட பிரதேசம். அது முல்லையும் குறிஞ்சியும் திரிந்து ஏற்படுவதால் உண்டாவது. இதனைப் பின்னாளில் சிலப்பதிகாரத்தினூடாகத் தெளிந்து கொள்ளலாம்.

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் திரிந்து
நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்து
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்" (சிலப்பதிகாரம் அடி 64-66)

மழை பெய்யாது வரண்ட காலத்தில் முல்லை நிலமும், குறிஞ்சி நிலமும் தமது இயல்பை இழந்து புதிய வடிவம் பெறும். பாலை நிலம் உண்டு என்பதைப் புறத்திணை ஊடாகத் தொல்காப்பியம் கூறும்.

"வாகைதானே பாலையது புறனே
தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப" (தொல்.புறம்.சூ73)

இதனால் பாலை என்ற நிலமும் உண்டென்பது பெறப்படுகின்றது. வாகைத்திணை என்பது அகத்திணையின் புறமாகும். இளம்பூரணர் இது பற்றிக் கூறும் போது பின்வருமாறு குறிப்பிடுவார். "அதற்கு இது புறனாயவாறு என்னையெனின் பாலையாவது தனக்கென ஒரு நிலமின்றி எல்லா நிலத்திலும் காலம் பற்றிப் பிறப்பது போல இதுவும் எல்லா நிலத்திலும் எல்லாக்காலத்தினும் காலம் பற்றி நிகழ்வதாதலினாலும் புகழ்ச்சி காரணமாகப் பிரியுமாறு போலத் தன்னோடு ஒத்தாரினின்றும் நீங்கிப் புகழப்படுவதாலும் அதற்கு இது புறனாயிற்று." என்று கூறுவதிலிருந்து பாலை ஒழுக்கம் எல்லா நிலத்திலும் நிகழும் என்று கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது. இதனால்தான் பிற்காலத்தில் நானிலம் என்று சுட்டும் மரபு தோன்றியது. பட்டினப்பாலையில் மருதம், நெய்தல், குறிஞ்சி, முல்லை என்ற நிலங்கள் பேசப்படுவதை அவதானிக்கலாம்.

பாலை நிலத்தில் பிரிவு ஏற்படுகின்றது. ஓதற்பிரிவு, தூதுப்பிரிவு, பொருள்வயிற்பிரிவு, போர்ப்பிரிவு எனப் பிரிவு ஏற்படுவதைத் தொல்காப்பியம் கூறும். பட்டினப்பாலையில் தலைவன் தலைவியைப் பிரிய நேரிடும் பொழுது அவன்(தலைவன்)தன் நெஞ்சிற்குக் கூறியதை நோக்கலாம்.

"முட்டாச்சிறப்பின் பட்டினம் பெறினும்
வார் இரும் கூந்தல் வயங்கு இழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே
திருமாவளவன் தெவ்வர்க்கு ஒக்கிய
வேலினும் கொடிய கானம் அவன்
கோலினும் தண்ணிய தட மென் தோளே" (பட்டினப்பாலை அடி 299-301)

நெஞ்சே, காவிரிப்பூம்பட்டினத்தையே எனக்கு உரிமையாகப் பெறுவேன். ஆயினும் நீண்ட கரிய கூந்தலை உடைய தலைவியைப் பிரிந்து இருக்க வரமாட்டேன். அவளுடைய மென்மையான அகன்ற தோள்கள் திருமாவளவனின் செங்கோலைக்காட்டிலும் தண்மையானவை. அவளைப் பிரிவது என்பது அவன் பகைவர் மேல் எறியும் வேலைக்காட்டிலும் கொடுமையானது. அதனால் தலைவியைப் பிரிய மாட்டேன் என்று தனது நெஞ்சிற்குக் கூறுகின்றான். தலைவன் கூற்று பாலைநில அக ஒழுக்கத்தைக் கூறுவதை நோக்கலாம். தொல்காப்பியம் இதன் இலக்கணத்

தைப் பின்வருமாறு கூறுகின்றது.

"செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே
வன்புறை குறித்த தவிரிச்சி ஆகும்." (தொல்.கற்பு.சூ.183)

தற்காலிகமாகத் தலைவியைப் பிரிந்து செல்வதை நிறுத்திப் பின்னர் மறுபடியும் தலைவியைச் சமாதானப்படுத்திப் பிரிவான். இதனால் அது பிரிவாகிய பாலைத்திணையைச் சுட்டுகின்றது.

"செறுவும் வாவியும் மயங்கி நீரற்று
அறுகோட்டு இரலையொடு மான்பிணை" (பட்டினப்பாலை வரி 244-245)

இப்பாடல் வயல்களும் பொய்கைகளும் வேறுபாடு இல்லாமல் அழிந்ததைக் கூறுகின்றது. மருதநிலம் முல்லையாகிய செய்தியைப் பார்க்கிறோம். போரில் மருதம் முல்லையாயிற்று. காட்டினை நாடாக்கிய செய்தியும் கூறப்படுகின்றது. முல்லை நிலம் அழிவது காட்டப்படுகின்றது.

"தீம்புகார்த் திரைமுன்துறைத்
தூங்கு நாவாய் துவன்று இருக்கை
மிசைக்கூம்பின நசைக்கொடியும்
மீன் தடித்து விடக்கு அறுத்து
ஊன்று பொரிக்கும் ஒலிமுன்றில் மணற்குவைஇ.." (பட்டினபாலை.வரி173-178)

பூம்புகார் நகரின் கடற்றுறையில் அசைந்து கொண்டிருக்கும் மரக்கலங்கள் களிறுகள் போலக் காட்சியளித்ததாம். மீன்களை வெட்டியும் இறைச்சியை அறுத்தும் பொரித்த காட்சி காட்டப்படுகிறது. இதனூடாக நெய்தல் நிலத்தைப் பட்டினபாலை அழகுறக்காட்டுகின்றது.

பாட்டின் முடிவில் மாத்திரம் அகத்திணை பேசப்படுகின்றது எனச் சில ஆய்வாளர்கள் கூறுவது பொருத்தமற்றது. ஆனால் திருமாவளவன் மனைவியுடனும் புதல்வருடனும் மகிழ்ந்திருந்த செய்தி இங்கு சொல்லப்படுகின்றது. அகப்பாடலின் அமைப்புப் பற்றிய கோட்பாட்டினைத் தொல்காப்பியம் பின்வருமாறு கூறும்.

"முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங்காலை முறை சிறந்தனவே
பாடலுட் பயின்றவை நாடுங்காலை" (தொல்.அகம். சூ.03)

அகத்திணையில் முதல், கரு, உரிப்பொருளின் தொழிற்பாடு முக்கியமாகக் கருதப்பட்டது. பட்டினப்பாலையில் முதல், கரு, உரிப்பொருட்கள் பயிலப்படுவதைக் காணலாம். தொல்காப்பியம் கருப்பொருள் எவை என்பதைப் பின்வருமாறு குறிப்பிடும்.

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகைப் பிறவும் கருவென மொழிப." (தொல்.அகம்.சூ.20)

மருதநிலத்தில் காணப்படும் கருப்பொருட்களாக நெய்தல் மலர்கள், நெல், எருமைகள், தென்னை மரங்கள், வாழைகள், பாக்குமரங்கள், பனை மரங்கள், மஞ்சள், இஞ்சி என்பன மருத நிலத்தை வளம் கொழிக்கச்செய்தன. நெய்தல் நிலக் கருப்பொருட்களாக வருணன், பனை, வெண் தாளிச்செடி, மீன், நண்டு, தெளிந்த நீர், தாழை மரங்கள், குதிரை என்பன அமைந்தன. பட்டினப்பாலை அகப்பாடல் மரபின் கோட்பாட்டினையும் பின்பற்றிப் புதிய நோக்கில் செல்வதை நோக்கலாம்.

**போர்ச் செய்தி**

பட்டினப்பாலை அகத்திணை நூல் என்று பகுக்கப்பட்டாலும் போர்ச்செய்தி சொல்லுகின்ற நூல் என்றும் கூறலாம். எனவே பட்டினப்பாலை அகப்புற நூல் என்று கொள்ளுவது பொருத்த மாகும். பின்னாளில் இலக்கண நூல்கள் அகப்புறம், புறப்புறம் என்று பேசுவதைச் சிந்திக்கலாம். முத்தொள்ளாயிரமும் அகப்புறம் பேசும் இலக்கியமாக இருப்பதை இவ்விடத்தில் சிந்திக்கலாம். திருமாவளவன் உழிஞைப் போர் செய்ததாகப் பட்டினப்பாலை கூறும்.

"உழிஞைதானே மருதத்துப் புறனே
முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்
அணை நெறி மரபிற்கு ஆகும் என்ப." (தொல், புறம்.சூ.66)

உழிஞை என்பது ஒரு வகைப் பூ. இப்பூவைச் சூடிப் போர் செய்வதால் திணைக்குப் பெயர் ஆயிற்று. இங்கு உழிஞைப் போர் நடைபெற்று, வெற்றி பெற்று இருக்கும் அரசனைப் புகழ்ந்து பாடும் பாடலாக அமைந்திருப்பது புதுமையானது. தொல்காப்பியம் உழிஞைக்குரிய துறைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றது.

"கோமான் முன் தேர்க்குரவை
ஒன்றிய மரபின் பின்தேர்க்குரவை
பெரும்பகை தாங்கும் வேலினது வென்றி
போரில் அரும்பகை தாங்கும் ஆற்றல்
புல்லார் வாழ்க்கை வல்லான் பக்கம் (தொல்.புறம்.சூ.75)

இத்தகைய புறத்திணை மரபு பட்டினப்பாலையில் எவ்வாறு பேசப்படுகின்றது என்பதை நோக்கலாம். திருமாவளவன் அரசுரிமை பெற்றதற்கு மகிழ்ச்சியடையாதவனாகிப் பகைவர் காவல் அரண்களை அழித்தான். அவர்களுடைய கோபுர வாயிற் கதவுகளைத் தன்னுடைய யானைப்படை களைக் கொண்டு தகர்த்தான். பகைவரின் முடியணிகளை யானையின் காலால் இடறச் செய்தான். குதிரைப் படைகளைக் கொண்டும் பகைவரை வீழ்த்தினான். மதில் அரண் களை அழித்தல் உழிஞைப்போர் என்று கூறப்படுகின்றது. போர்க்களத்தில் வீழ்ந்தவர்களை உண்ணப் பருந்துகள் வட்டமிட்டன. பாசறையில் முரசங்கள் முழங்கின. மருதநிலம் முல்லை யாயிற்று. கூத்தர் மலர் தூவி முழவுகள் முழங்க யாழிசை நரம்புகள் ஒலிக்க இனிய பாடல்களைப் பாடினர்.

பாழடைந்த மன்றங்களில் நரிகள் ஊளையிட்டன. முட்கள் வளர்ந்தன. அறுகம்புல் வளர்ந்தது. பிணம் தின்னும் பேய்கள் நெருங்கின. ஆந்தைகள் கூவித் திரிந்தன. கொள்ளை நடைபெற்றதால் நெல் இல்லாத வெறும் கூடைகள் இருந்தன.

அடுத்த பாடலில் முல்லை நில மக்கள் அழிவதைக் காணலாம். திருமாவளவனது போர் வீரம் பேசப்படுகின்றது. திருமாவளவனுக்குப் பகை மன்னரின் மதிலைச் சீறிக் கைப்பற்றும் வலிமையும் யானை, குதிரை, காலாட்படைகளும் மறவர் வலிமையும் இருந்தது. முல்லை நிலத் தார் முழுவதும் அழிந்தனர். புறநானூற்றில் நடைபெறும் போர்ச் செய்தியைப் பட்டினப்பாலை யிலும் ஒப்பிட்டு நோக்கலாம். பட்டினப்பாலையில் போர்க்களத்தை ஆசிரியர் எடுத்துக் காட்டுவது இந்நூல் ஒரு புறத்திணை நூல் என்று கொள்ளவும் இடம் தருகின்றது. (பட்டி.278-282)

திருமாவளவன் நினைத்ததை முடிக்கும் வெற்றி வீரனாகக் காட்டப்படுகின்றான்.
"மலை அகழக்குவனே கடல் தூர்க்குவனே
வான் வீழக் குவனே வளி மாற்றுவன் எனத்

தான் முன்னித் துறை போகலின்" (பட்டினப்பாலை.271-273)

மலையைத் தோண்டுபவனாகவும் கடலை நிரப்பி மேடாக்குபவனாகவும் வானத்தை வீழ்த்துபவனாகவும் காற்றின் திசையை மாற்றுபவனாகவும் காட்சியளிக்கின்றான். அவன் போர் வீரனாகவும் கடவுளுக்கு நிகரான செயல் வீரனாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளான் நுண்மையான கூர்ந்த அறிவால் செய்யத்தக்கது எதுவென்று ஆராய்ந்து போரிட்டு வென்று அரசுரிமையை முறை யாகப் பெற்றான்.

பொருளாதார ஏற்றுமதி, இறக்குமதி இடமாகக் காவிரிப்பூம்பட்டினம் இருந்ததைப் பின்வரும் பாடல் எடுத்துக்காட்டுகின்றது.

"நீரின் வந்த நிமிர் பரிப்புரவியும்
காலில் வந்த கரும் கறிமூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொருளும்
..........................................
ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்" (பட்டினப்பாலை 185-191)

அதாவது பிற நாடுகளில் இருந்து குதிரைகள் கடல் மார்க்கமாக வந்திருந்தன. தரை மார்க்க மாக வண்டில்களில் மிளகு மூட்டைகள் கொண்டுவரப்பட்டன. இமய மலையிலே பிறந்த மாணிக் கங்கள், பொன் வகைகள் மேற்கு மலையிலே விளைந்த சந்தனக்கட்டைகள், அகிற் கட்டைகள், தெற்குக் கடலிலே தோன்றிய முத்துக்கள், கீழைக்கடலிலே தோன்றிய பவளங்கள் எல்லாமே காவிரிபூம் பட்டினத்திலே குவிந்திருந்த பண்டங்களாகும். மேலும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது இலங்கையில் இருந்து உணவுப்பொருட்களும் பர்மாவில் இருந்து பல பொருட்களும் வந்தன என்பதில் இருந்து ஏற்றுமதி - இறக்குமதியின் துறைமுகமாகக் காவிரிப்பூம் பட்டினம் காணப்பட் டது என்பது புலப்படுகின்றது. சங்காலத்தில் இலங்கையில் ஏற்றுமதி நடைபெற்றதைப் பட்டினப் பாலை குறிப்பிடுவதிலிருந்து இலங்கையினுடைய வரலாறு சங்ககாலத்தில் இருந்து தொடங்கு கின்றது என்பதற்கு ஆதாரமாகப் பட்டினப்பாலை விளங்குகின்றது.

சோழ, பாண்டிய, சேரர்களுடைய கல்வெட்டுகளில் பூம்புகார் பற்றிய செய்திகளை அறியமுடி யும். பட்டினப்பாலை பூம்புகார் பற்றித் தெளிவாகக் குறிப்பிடும். மாடமாளிகை, மன்றங்கள், கோட் டங்கள், பூஞ்சோலைகள், வாணிபக் குவியல்கள், காவிரியாறு கலக்கும் காட்சிகள் பலவற்றைப் பட்டினப் பாலையில் தரிசிக்கலாம். பின்னாளில் சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் பிற நூல் களும் பூம்புகார் காட்சிகளைப் பதிவுசெய்துள்ளன. பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு சோழ ராட்சி வலுவிழந்த பின்னர் பாண்டியர் பூம்புகாரை அழித்தனர். பின்னர் கடல்கோள்களாலும் பூம்புகார் அழிவுற்றது. இந்தியத் தொல்லியல் ஆய்வு நிறுவனம் வங்கக் கடலில் புதையுண்டு இருக்கும் பூம்புகார் நகரம் பற்றிப் பல ஆய்வுகளைப் பல ஆண்டுகளாக நடாத்தி வருகின்றது. கட லாய்வின் மூலமும் நில ஆய்வின் மூலமும் பூம்புகாரின் பல எச்சங்கள் வெளியாகி வருகின்றன. இவை தமிழரின் பழம்பெரும் நாகரிகம் தொடர்பான விடயங்களை வெளிக்கொண்டு வரு கின்றன. பட்டினப்பாலை கூறும் செய்திகளை இவ்வாய்வு மெய்ப்பிக்கின்றது. மேற்படி ஆய்வு களை இலக்கியங்கள் மெய்ப்பிப்பதையும் அறிய முடிகின்றது.

காவிரிப்பூம் பட்டினத்திலே பல வகையான கொடிகள் பறக்கவிட்டிருக்கும் காட்சி பல செய்திகளை அறிவுறுத்தின. பட்டினம் என்றால் பல கொடிகள் பறக்க விடுவதைப் பின்னாளில் காண்கிறோம். கோயில் வாசலில் கடவுளை ஆவாகனம் பண்ணிக் கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன. அறிஞர்கள் கூடும் சபைகளைக் குறிக்கும் கொடிகள், வியாபார நிறுவனங்களில் பறக்கவிட்டிருக்கும் கொடிகள், பட்டிமன்றங்கள், வழக்காடு மன்றங்கள் முதலிய பல இடங்களில் பல்வேறு நிறங்களு

டன் கொடிகள் பறக்கவிடப்பட்டிருக்கின்றன.

பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனாருக்குத் திருமாவளவன் (கரிகால சோழன்) பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்ததாகக் கலிங்கத்துப் பரணி கூறுகின்றது.

"தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர் பொன்
பத்தொடு ஆறு நூறாயிரம் பெறப்
பண்டு பட்டினப்பாலை கொண்டதுவே (கலிங்கத்துப் பரணி பா.58)

மேற்படி நூற்பாவால் இச் செய்தி அறியப்படுகின்றது.

அக்கால மக்கள் உயர்ந்த நாகரிகமுடையவர்களாக வாழ்ந்ததைப் பட்டினப்பாலை நன்கு உணர்த்துகின்றது. வாணிப நிலை உயர்வான முறையில் நடைபெற்றது. கடல்மார்க்கமாக வந்த பொருட்களை நிலத்தின் வழியாக இறக்கினர். நிலத்திலிருந்து கிடைத்த பொருட்களைக் கடலில் மரக்கலங்களில் ஏற்றினர். துறைமுகத்தில் சுங்கச்சாவடிகள் அமைந்திருந்தன. சுங்கச்சாவடியில் சோழர்களின் சின்னமான புலி இலட்சினை பொறித்து வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டது.

பூம்பட்டினத்தில் ஐந்துவகையான பூஞ்சோலைகள் இருந்ததை அறிய முடிகின்றது. இல வந்திச் சோலை, உய்யாவனம், சம்பாவதிவனம், கவரேவனம், உவவனம் என்ற ஐந்து சோலை களும் எழில் மிகுந்தனவாகக் காட்சி கொடுத்தன.

சுடுமணலால் செய்யப்பட்ட கிணறு இருந்ததைப் பட்டினப்பாலையில் காணலாம்.

"பறழ்ப்பன்றிப் பல்கோழி
உறைக்கிணற்றுப் புறச்சேரி" (பட்டினப்பாலை75-76)

பட்டினப்பாலையில் உள்ளது போன்று ஈழத்திலும் சுடுமண் கிணறு காணப்பட்டதைத் தொல் பொருள் அகத்தில் காணலாம்.

ஏனைய நாட்டவர்களைச் சந்தித்து வந்ததால் கலாசாரப் பரிவர்த்தனை நிகழ்ந்துள்ளது. வாணிப வளர்ச்சியும் செல்வச் செழிப்பும் நகர்ப்புறத் தோற்றத்திற்கு வழிவகுக்கும் நகரமே அரசர் களின் தலைநகரமாகும். இது பட்டினம் என அழைக்கப்பட்டது. பரிணாம வளர்ச்சியைப் பட்டினப் பாலையிலே தரிசிக்கலாம். பட்டினப்பாலை அரங்கேற்றம் பற்றிய செய்தியைத் திருச்சி ஜில்லாவி லுள்ள திருவெள்ளறையில் செதுக்கப்பட்ட கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

"வெறியார் தளவத் தொடைச் செய மாறன்
வெகுண்டதொன்றும்
அறியாத செம்பியன் காவிரி காட்டி லரமியத்துப்
பறியாத தூணில்லை கண்ணன் செய் பட்டினப்பாலைக் கன்று
நெறியால் விருந்தூண் பதினாறு மேயங்குகின்றனவே" (திருவெள்ளறைக் கல்வெட்டு)

பட்டினப்பாலையை அரங்கேற்றுவதற்கு பதினாறு தூண்கள் அமைந்த பெரிய மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது என்ற செய்தியை இச்சாசனம் எடுத்துக் காட்டுகின்றது. வங்கக் கடலில் தூங்கும் பட்டினத்தை ஆய்வு செய்த ஆய்வாளர்கள் பதினாறு தூண்களை அமைத்த மண்டபத்தை ஆய்வுகள் மூலம் மெய்ப்பிப்பதைக் காணலாம். பதினாறு தூண் கொண்ட மண்ட பத்திற்கும் பதினாறு கோடி பொன் கண்ணனாருக்குக் கொடுத்த செய்திக்கும் ஓர் இயைபு இருப் பதை நோக்கலாம். கரிகாலன் பதினாறு தூணிலும் பதினாறு பொற்காசுகளைத் தூக்கிவிட்டுக் கொடுத்திருக்க வேண்டும்.

மார்க்சியத் திறனாய்வாளர் ஞானி "அகத்திணை இலக்கியத்தில் பாலைத்திணையும் திணை மயக்கமும் முக்கியத்துவம் பெற்றது ஏன்? மருதநில நாகரிகம் பிற நிலங்களையும் தன் ஆதிக் கத்திற்குக் கொண்டுவரத் தொடங்கியது." (ஞானி.2010.ப.114) என்று கூறியது இங்கு குறிப்பிடத்தக்கது. போர்களினால் பேரழிவு ஏற்பட்டது. மக்கள் தமக்குரிய நிலத்தில் வாழ முடியாது போய்விட்டது. நகர மாக வளர்ச்சி ஏற்பட்ட போது பொருள் தேட்டத்திற்காகப் பிரிய வேண்டிய சூழல் ஏற்பட்டது. தனியு டைமையும் அரச அதிகாரமும் சமூகத்தில் தன் ஆதிக்கத்தை நிலைப்படுத்திய போது மாறிய சமூகச் சூழல் ஏற்பட்டது. இளம்பூரணர் நான்கு நிலங்களிலும் பாலை இயங்கு வதாகக் குறிப்பிட்டதை இவ் விடத்தில் நோக்கலாம். எல்லா நிலத்திலும் பாலை ஒழுக்கம் நிகழ்ந் ததைப் பட்டினப்பாலை மெய்ப்பிக்கின்றது. சங்க காலம் தொடர முடியாமல் அறநெறிக் காலம் ஏற்படுகின்றது. மருதநில வளம் நிலவுடைமைச் சமூக அரச உருவாக்கத்திற்கு வழிசமைத்ததைப் பட்டினப்பாலையினூடாக அறிய முடிகின்றது

**தொல்காப்பியர்**

"உழிஞைதானே மருதத்துப் புறனே (தொல்.புறம்,66) என்கிறார்.

மருதத்தின் புறமாக உழிஞைப் போரைத் தொல்காப்பியம் குறிப்பிடும். பட்டினப்பாலையில் திருமாவளவன் அரசுரிமை பெற்றபின் மகிழ்ச்சியில் உழிஞைப் போர் புரிந்து உழிஞைப் பூச் சூடு வதைக் காணலாம். போரின் பின்னர் மருதநிலம் முல்லை நிலமாவதைப் பட்டினப்பாலை ஆசிரியர் காட்டுகின்றார். அம்பலங்கள், பாழடைந்த மன்றங்கள், மருத நில அழிவு எனப் போரின் நிலைமையைப் பட்டினப்பாலையில் காணலாம். போரின் பின்னர் நாட்டைப் பண்படுத்தியதையும் பார்க்கலாம். சோழ நாட்டிலுள்ள கட்டிடங்களை நாடாக்கினான். குளங்களைத் தோண்டி நாடாக் கினான். உறையூரை விரிவு படுத்தினான். கோயில்கள் பல கட்டி அங்கு குடிகளை வாழச் செய் தான்.

பட்டினப்பாலையில் பல கவின் கலை நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டப்படுகின்றன. சில பாடல் களையும் நாடகங்களையும் பார்த்து மகிழ்ந்துள்ளனர். அறிவு நிரம்பிய கூத்தர் முழவுகள் முழங்க யாழிசை நரம்புகள் ஒலிக்க இனியபாடல்களைப் பாடிப் பெருவிழாக் கொண்டாடினர். முத்தமிழ் வளர்ச்சிக்கு இடமாகக் காவிரிப் பூம்பட்டினம் விளங்கியதைப் பட்டினப்பாலை காட்டுகின்றது. பல தெய்வ வழிபாடு நடைபெற்றதைப் பட்டினப்பாலையில் காணலாம். "கந்துடைப் பொதி" (பட்டினப் பாலை வரி 250) இதில் கந்து என்பது சிவலிங்கம் என உரையாசிரியர்கள் குறிப்பிடுவர். மெழுகி மலர்கள் தூவி வழிபட்டதைக் காணலாம். அணையா விளக்கெரித்த காட்சி காட்டப்படுகின்றது.

"செறி தொடி முன்கை கூப்பிச் செவ்வேள்" (பட்டினப்பாலை வரி 152)

கை கூப்பி முருகனை வழிபட்டனர். முருகனை வழிபட்டு வெறியாட்டு நிகழ்வினை மகளிர் செய்தனர். வங்கியம் இசைக்க முழவுகள் அதிர விழா எடுத்தனர். தவம் செய்வோர் தங்கும் தவப் பள்ளிகள் காணப்பட்டன. முனிவர்கள் தீயில் நெய் சொரிந்து வேள்வி செய்தனர். தேவர்களைக் கோயில் வழிபாட்டின் வழி போற்றினர்.

வேள்வி செய்து அவியுணவைப் பிறருக்குக் கொடுத்தனர். பசுக்களையும் எருதுகளையும் பாது காத்தனர். உணவினை ஏழைகளுக்குத் தானம் செய்தனர். தவப்பள்ளிகளும் அட்டில் (சமை யலறை) சாலைகளும் இருந்ததைப் பட்டினப்பாலையில் காணலாம். பல தெய்வங்களை வழிப்பட்ட மக்கள் வாழ்வியலைப் பட்டினப்பாலை எடுத்து விளக்கும். மேலும் இதன் வளர்ச்சியைச் சிலப்பதிகாரத்தில் காணலாம். சிலப்பதிகாரம் சிவன் கோட்டம், திருமால் கோட்டம், முருகவேள் கோட்டம், சூரியன் கோட்டம், சந்திரன் கோட்டம், அருகதேவன் கோட்டம் எனப் பல வழிபாட்டு

மரபுகளைக் கூறி நிற்கின்றது.

## முடிவுரை

பட்டினப்பாலை அகத்திணையையும் அதே நேரம் புறத்திணையையும் பேசும் நூலென்று கொள்ள வேண்டும். இதனால்தான் பிற்கால இலக்கண நூல்களில் அகப்புற இலக்கணம் என இலக் கணம் பேசப்படுவதைக் காணலாம். (வீரசோழியம், இலக்கண விளக்கம்) இந்நூலில் வரும் திருமாவளவன் என்பது கரிகாலனையே சுட்டுகிறது என்ற முடிவிற்கு வர முடியும். பிற்காலக் காப்பிய வளர்ச்சிக்குப் பட்டினப்பாலை அடிப்படையாக அமைகின்றது. பாட்டுடைத் தலைவனாகக் கரிகாலன் சித்திரிக்கப்பட்டுள்ளான். நாட்டு, நகர வர்ணனை சிறப்பாக வர்ணிக்கப் பட்டுள்ளது. போர்ச் செய்தி விரிவாகப் பேசப்படுகின்றது. புறநானூற்றுடன் பட்டினப்பாலையின் போர்ச் செய்தியை ஒப்பிட்டுப் பேச முடியும். பட்டினப்பாலையின் போர்ச் செய்தி கலிங்கத்துபரணிக்கு வளர்ச்சிப்படியாக அமைகின்றது. பூம்புகார் பட்டினத்தினுடைய வளர்ச்சியைச் சிலப் பதிகாரத்தில் காணலாம்.

## உசாத்துணை நூல்கள்


* அகநானூறு, (2003)., அமிழ்தம் பதிப்பகம், சென்னை.
* இராகவையங்கார்.ரா, (1951)., பட்டினப்பாலை ஆராய்ச்சியும் உரையும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.
* சங்க இலக்கியம் பத்துப்பாட்டு, (2003)., சுப்பிரமணியன்.ச.வே,கோவலூர் மடாலயம், சென்னை.
* சங்கத்தமிழ் நூல்கள்,1978, ஆதிரையார், சுவாமி மலை பதிப்பகம், சென்னை.
* சிலப்பதிகாரம் மூலமும் உரையும், (1950)., சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
* சிவத்தம்பி.கா, (2009)., சங்க இலக்கியம் கவிதையும் கருத்தும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
* சீனிவாச ஐயங்கார்.பி.டி., (2007). தமிழர் வரலாறு கிபி 600 வரை. தமிழாக்கம் பி. இராமநாதன். தமிழ் மண் பதிப்பகம், சென்னை
* ஞானி (2010). தமிழ்த் திறனாய்வு, காவ்யா வெளியீடு, சென்னை
* பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, 1957, மறைமலையடிகள், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநல்வேலி.
* புறநானூறு, (1935)., லாஜர்னல் அச்சகம், சென்னை